## விஜய குமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலை சபை – 2017

விஜய குமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலை சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 38 ஆம் இலக்க விஜய குமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலை சபை சட்டம் 13(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முமைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை விஜய குமாரதுங்க ஞாபகர்த்த வைத்தியசாலை சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02

2017 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த காசுப் பாய்ச்சல் கூற்று தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் ரூபா 476,644 தொகை காசு உட்பாய்ச்சல் என காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ii) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்குகளின் மீதி குறைவடைதல் ரூபா 15,000 தொகையினை மிகையாக காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(iii) முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் சீராக்கல் என ரூபா 172,628 இற்கன பெறுமதி ஒன்று உட்படுத்தப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்று சமப்படுத்தப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக ஆக்கபூர்வமான வாழ்கைக் காலம் வருடாந்த மீளாய்வு செய்யப்படாமையால் ரூபா 97,838,607 தொகை கிரயத்தையுடைய சொத்துக்கள் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் தற்காலிகமாக செயற்படாது காணப்பட்டுள்ள, செயற்பாடு பயன்பாட்டிலிருந்து ஓய்வு வழங்கப்பட்டுள்ள மற்றும் அகற்றுவதற்குரிய ஆதனங்கள் பொறித்தொகுதிகள் ஆகிய உபகரணங்களை இனங்காண்பதற்கு மற்றும் நியாயமான பெறுமதியை வெளிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்து ஒன்றின் பெறுமானத் தேய்வு கழித்தல் ஆரம்பிக்கப்படுவது அதனை பயன்படுத்துவதற்கு நிலைக்கு கொண்டு வந்த பின்னர் எனினும் அதற்கு முரணாக தயாரான சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதி மற்றும் அகற்றிய திகதி என்பவற்றை கவனத்தில் எடுக்காமல் கொள்வனவு செய்திருந்த ஆண்டிலேயே பெறுமானத் தேய்வு கழித்தல் மற்றும் அகற்றிய ஆண்டில் பெறுமானத் தேய்வு கழிக்காதிருத்தல் என்ற கொள்கை கடைபிடிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2011 ஆண்டின் போது அரசாங்க மானியமாக கிடைத்திருந்த ரூபா 5,600,000 தொகை கிரயத்தையுடைய மோட்டார் வாகனமொன்று 2016 ஆண்டளவில் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்தது. எனினும் வருடாந்த பெறுமானத் தேய்வு தொகையை விட குறைவான பெறுமதியில் அரச மானியத்தை கிரமமாக குறைத்தல் மேற்கொள்ளபட்டியிருந்தமையினால் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அந்த மோட்டார் வாகனத்திற்காக ரூபா 2,240,000 இற்கான மீதி ஒன்று அரச மானியக் கணக்கில் மீதியாகக் காணப்பட்டது.

(ஆ) 2010 ஆண்டு முதல் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 12,635,376 தொகைக்காக நிலையான சொத்துக்களில் முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டு தொடர்பக வருடாந்த பெறுமானத் தேய்வு தொகை முறையே ரூபா 2,409,739 தொகை மற்றும் ரூபா 1,875,023 தொகைகள் எனினும் அதற்கு சமமான பெறுமதியினால் நன்கொடை கணக்கு கிரமமாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 886,467 தொகைக்காக அட்டுறு ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு அட்டுறு வாயு சீராக்கி இயந்திர திருத்தச் செலவு மற்றும் பயிற்சி வழங்கள் நிகழ்ச்சி திட்டச் செலவுகள் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஈ) அரச சேவையிலிருந்து ஒய்வு பெற்று மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் வைத்தியசாலையில் கடமையாற்றும் 6 உத்தியோகத்தர்களுக்காக 2017 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 262,031 இற்கான பணிக்கொடை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான கணினி இயந்திர பெறுமானத் தேய்வு ரூபா 20,850 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) 4 வாட்டுகளில் மற்றும் அறுவை சிகிச்சை கூடத்தில் காணப்பட்ட ரூபா 1,343,084 இற்கான மருந்துகள் மற்றும் அறுவை பொருட்களின் இருப்பு பௌதீக பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டிருக்காமையால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மருந்துகள் மற்றும் அறுவை பொருட்கள் மீதி இருப்பு அப் பெறுமதியினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இருப்புகளின் கிரயம் ரூபா 16,579,101 தொகையாக இருந்த போதிலும், இருப்பு பேரேட்டின் பிரகாரம் அந்த இருப்பின் கிரயம் ரூபா 16,331,318 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 247,783 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணம் விளக்கப்படவில்லை.

**2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| | நிதிப் பிரமாணம் 702(3) | கூட்டுத்தொகை ரூபா 2,317,856 தொகைக்கான மாதாந்த ஒப்பந்த பெறுமதியுடைய பராமரித்தல் மற்றும் சுத்திகரிப்பு சேவை, பச்சை உணவு பொருட்கள் வழங்கள், பாதுகாப்புச் சேவை, அசுத்தமான புடவைகளை கழுவுதல் மற்றும் தாதிகள் விடுதி ஒன்றிற்காக வீடு ஒன்று வாடகைக்கு பெறல் ஆகிளய சேவைகளுக்காக உரிய ஒப்பந்த நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கைளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | மருந்தக முகாமைத்துவ கைநூல் | |
| | (i) 4 ஆம் அத்தியாயத்தின் பந்திகள் 1 மற்றும் 2 | மருந்துகள்,அறுவை பொருட்கள் இரசாயன ஆய்வுகூட பண்டங்கள் மற்றும் கதிர் வீச்சுள்ள பண்டங்களுக்காக ஒட்டுமொத்த வருடாந்த தேவைக்காக மதிப்பீடு தயாரித்திருக்கவில்லை |
| | (ii) 5 ஆம் அத்தியாயத்தின் பந்தி 2 | மருந்துகள் வழங்கும் செயற்பாட்டிற்கு செலவிடப்படும் மொத்த காலம் (Lead Time) தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன் குறைந்த இருப்பு மட்டம் மற்றும் உச்ச இருப்பு மட்டம் மற்றும் பாதுகாப்பு இருப்பு மட்டம் பேணப்பட்டிருக்வில்லை |
| | (iii) 5 ஆம் அத்தியாயத்தின் பந்தி 3 மற்றும் 4 | காலவதியாதல் அல்லது தரத்தில் குறைவடைதல் காரணமாக வைத்திய வழங்கள் பகுதிக்கு திருப்பி அனுப்பப்படும் மருந்துகள் தொடர்பாக காலாண்டு அறிக்கைகள் தயாரித்திருக்கவில்லை. |
| | (iv) 10 ஆம் அத்தியாயத்தின் பந்தி 13 | (i) பௌதீக இருப்புக் கணிப்பீடு முறைப் பிரகாரம் நடைபெற்றிருக்காமையால் இருப்பு மிகைகள் மற்றும் பற்றாக்குறை, மெதுவாக அசையும், அசையாத, காலவதியாவதற்கு அண்மித்த மற்றும் காலவதியாகிய பண்டங்களை வெளிப்படுத்தியிருக்கவில்லை. எனினும் இருப்பு புத்தகங்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,011,606 தொகை கிரயத்தையுடைய மெதுவாக அசையும் மருந்து மற்றும் அறுவை பொருட்கள் 37 வகைகளை சேர்ந்த 374,473 அலகுகள் மற்றும் ரூபா 528,047 கிரயத்தை உடைய அசையாத மருந்துகள் மற்றும் அறுவை பொருட்கள் 18 வகையைச் சேர்ந்த 7773 அலகுகள் காணப்பட்டன. |

(ii) இருப்பு பதிவேட்டின் பிரகாரம் 4 வாட்டுகள் மற்றும் அறுவை சிகிச்சை கூடங்கள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,343,004 தொகையான கிரயத்தை உடைய மருந்து மற்றும் அறுவை பண்டங்களின் இருப்பு பௌதீக பரிசோதனைக்கு ஆளாக்கியிருக்க வில்லை.

(iii) பௌதீக இருப்பு கணிப்பீட்டு அறிக்கை, கணிப்பீட்டு சபை அனைத்து அங்கத்தவர்களும் கையொப்பமிட்டு இருக்காததுடன் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பிரிவுக்கு பொறுப்பான உத்தியோகத்தரின் பெயர், திகதி மற்றும் கையொப்பமிட்டு சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.4 போதிய அதிகரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

வைத்தியசாலை பணிப்பாளரின் அங்கீகாரம் இன்றி ரூபா 283,310 தொகை மொத்த கிரயத்தையுடைய 10 வகையான மருந்து மற்றும் அறுவை பொருட்கள் வேறு 03 அரச வைத்தியசாலைகளுக்கு பிரதான மருந்தாளரினால் வழங்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வைத்தியசாலை சபையின் செயற்பாட்டு விடயங்களின் நிதிவிளைவுகள் ரூபா 14,269,158 இற்கான மிகையொன்று இருந்ததுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,091,146 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 17,360,304 இற்கான வளர்ச்சி ஒன்றினை காட்டியது. மீளய்வாண்டிற்கான செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 23,762,457 இனால் அதிகரித்திருந்த போதிலும் அரச மானியம் ரூபா 53,000,000 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் மற்றும் கடந்த 04 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 மற்றும் 2014 ஆண்டுகளின் போது முறையே ரூபா 20,378,939 இற்காக பற்றாக்குறை மற்றும் ரூபா 3,558,018 இற்கான மிகை ஒன்றும் காணப்பட்டதுடன் 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே ரூபா 20,023,884 இற்கான மற்றும் ரூபா 3,091,146 இற்கான பற்றாக்குறை ஒன்றும் 2017 ஆண்டின் போது ரூபா 14,269,158 இற்கான மிகையொன்றும் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவிற்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துகளுக்கான பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த பின்னர் 2013 ஆண்டின் போது ரூபா 68,464,933 இற்கான பங்களிப்பு 2017 ஆண்டளவில் ரூபா 177,372,828 வரை இடையறாமல் வளர்ச்சியடைந்துள்ளது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2003 ஜுன் 02 ஆம் திகதி இலக்கம் PED/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆவது அத்தியாயத்தின் 5.1.2 பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் அமைப்பு வரைபடம், நிறுவனத்தின் பலம், பலவீனங்கள், வெளி அச்சுறுத்தல்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் மீதான பகுப்பாய்வு (SWOT Analyses) குறிக்கோள்களுக்கு பொருந்தக் கூடிய விதமாக குறிப்பிட்ட காலப்பகுதியில் நெருங்குவற்கு எதிர்பார்த்துள்ள இலக்கு மற்றும் அதற்கு செயற்படுத்தப்படும் உபாயங்கள் 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப்பகுதி தொடர்பாக தயாரித்திருந்த கூட்டிணைந்த திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கான உரிய செயற்பாடுகள் அதில் அடங்கியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது ரூபா 13,147,004 தொகை செலவிடப்பட்டு மருந்து வழங்கள் பிரிவில் இருந்து கொல்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த மருந்து,அறுவை பொருட்கள் ,இரசாயன ஆய்வுகூட பொருட்கள் கதிர் வீச்சு பண்டங்கள் 158 வகையான 851,287 அலகுகளில் ஒரு அலகு கூட கொள்வனவு செய்திருக்காமை மற்றும் கொள்வனவு செய்வதற்கு மதிப்பிடப்படாத 125 பண்ட வகைகளில் 461,792 அலகுகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 32,084,042 தொகை செலவிடப்பட்டிருத்தல் ஆகிய காரணங்களினால் தேவைகள் தொடர்பாக புரிந்துணர்வு ஒன்று மற்றும் விளிப்புணர்வு ஒன்று இன்றி குறிப்பிட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக மதிப்பீட்டு செலவு ரூபா 39,699,740 தொகை எனினும், அது 58 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் செலவிடப்பட்டிருந்த உள்ளவாறான செலவு ரூபா 62,654,007 தொகையாக காணப்பட்டது.

#### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வெளி நோயாளர் பிரிவினால் சிகிச்சை பெறும் நோயாளர்கள், கிளினிக் வரும் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை முறையே 11 சதவீதத்தில் 14 சதவீதம் மற்றும் 48 சதவீதத்தால் குறைந்திருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த கண் சத்திர சிகிச்சைகள் சிறிய சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை முறையே 81.72 சதவீதத்தினால் மற்றும் 33.46 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது அதேபோல முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த லேஸர் பரிசோதனைகளின் எண்ணிக்கை, X - ray பரிசோதனைகளின் எண்ணிக்கை மற்றும் Refraction Service முறையே 50 சதவீதத்தினால், 49 சதவீதத்தினால் மற்றும் 41 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது உடல் சார்ந்த விஷேடத்துவ மருத்துவர் மற்றும் கண் சத்திர சிகிச்சை விஷேடத்துவ மருத்துவர் ஆகியோர் சேவையில் இருந்து விளகியிருந்ததுடன் அப்பதவிகளின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்காமையினால் இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாகியுள்ளது. .

(ஆ) மொத்த கிரய மதிப்பீடு ரூபா 35 மில்லியன் தொகையை கொண்ட அலுவலக கட்டிடத்தின் இடவசதிகளை அதிகரிப்பதற்கான செயற்திட்டத்தின் மூலம் மருத்தவ கிளினிக், பல் கிளினிக் மற்றும் வெளிநோயாளர்களுக்கான ஆய்வுகூடத்திற்கான இடவசதிகளை அதிகரிப்பதை போலவே வெளி நேயாளர் பிரிவின் நோயாளர்களுக்கு காற்றோடத்துடனான தங்கி இருக்கும் வசதிகளை ஏற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் முறையான திட்டமொன்றின கீழ் செயற்பட்டிருக்காமையினால் மதிப்பீட்டுத்தொகை போதியளவாக காணப்படாமையினால் 2018 மே 31 அளவில் அச் செயற்திட்டத்தின் விடயங்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வண்டிற்காக தயாரிக்கப்ட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம், ரூபா 24,700,000 தொகை பெறுமதியான 4 மருத்துவ உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் பெறுகைகள் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் ரூபா 4,000,000 தொகை செலவிடப்பட்டு சத்திரசிகிச்சை கூட கட்டிடத்தை திருத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை அதற்காக கணிய பத்திரம் மற்றும் மதிப்பீடுகள் தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

வைத்தியசாலை சபையின் தேவையினை இனங்காணாமல் பின்வரும் இயந்திரங்கள் கொள்வனவு செய்திருந்த காரணத்தினால் அவை குறைபயன்பாட்டுடன் காணப்பட்டதுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆண்டின் போது ரூபா 2,500,000 தொகை செலவிடப்பட்டு, ஒரு மணித்தியாலத்திற்கு குறைந்த அளவு 60 பரிசோதனை அலகுகளுக்காக மிகை கொள்ளளவினைக் கொண்ட Fully Automated Hematology Analyzer இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்திருந்த போதிலும், 2015 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையான ஆண்டுகளின் போது முறையே ஒரு மணித்தியாலத்திற்கு 17 பரிசோதனை அலகுகள் மற்றும் ஒரு மணித்தியாலத்திற்கு 9 பரிசோதனை அலகுகள் மற்றும் மணித்தியாலயத்திற்கு 20 பரிசோதனை அலகுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆண்டின் போது ரூபா 8,736,000 தொகை செலவிடப்பட்டு 21 வகையான பரிசோதனைகள் மற்றும் ஒரு மணித்தியாலத்திற்கு குறைந்தளவு பரிசோதனை அலகுகள் 300 மேற்கொள்ளக்கூடிய கூடிய கொள்ளளவை கொண்ட Fully Automated Biochemistry Analyzer இயந்திரமொன்று கொள்வனவு செய்திருந்த போதிலும், முன்னைய ஆண்டின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது 12 வகையான பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முறையே ஒரு மணித்தியாலத்திற்கு 25 பரிசோதனை அலகுகள் மற்றும் 34 பரிசோதனை அலகுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2005 ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 55 ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பன குறிப்பிட்ட காலத்தில் அனுப்பப்படாமையால் அக் காலப்பகுதி தொடர்பாக அந்த நிதியத்திற்கு பங்களிப்பு தொகை ரூபா 1,533,879 தொகையும் மிகை விதிப்பாக ரூபா 2,204,066 தொகையும் ஆக மொத்தம் ரூபா 3,737,945 தொகை வைத்தியசாலை சபைக்கு செலுத்த வேண்டிய நேரிட்டிருந்தது.

(ஈ) X-Ray Films காணப்படும் இருப்பு மற்றும் நுகர்வுத் தொகை என்பன சரியாக இணங்காணாமல் தேவையை விட மிகையாக கொள்வனவு செய்திருந்தமையால் 2018 மார்ச் 01 திகதி அளவில் ரூபா 330,426 தொகை கிரயத்தையுடைய X-Ray Films 5006 தொகை காலாவதியாகியிருந்தது.

## 4.3 செயற்பாட்டு தொழிற்பாடுகள்

--------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டிற்கான பராமரிப்பு மற்றும் சுத்திகரித்தல் சேவையினை பெற்றுக் கொள்ளும் ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம், சேவை உயர்ந்த மட்டத்தில் நிறைவேற்றப்பட்டதென அவ் அவ் பிரிவுகள் மற்றும் வாட்டுகளுக்கு பொறுப்பான அலுவலர்களினால் சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனினும் அவ்வாறு பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டு தொடர்பான சுத்திகரித்தல் சேவைக்காக ரூபா 2,812,680 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வைத்தியசாலைக்கு பச்சை உணவுகள் வழங்குதல் மற்றும் நோயாளிகளுக்கு உணவு வழங்குதல் தொடர்பாக வெளியிட்டிருந்த 2015 மே 28 ஆம் திகதிய மற்றும் 01-21/2015 இலக்கம் கொண்ட சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பொது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேற்கூறிய சுற்றறிக்கையின் 5.1.3 மற்றும் 5.1.4 பந்திகளின் பிரகாரம் வார உணவு நிகழ்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கு நிறுவனத் தலைவரினால் உணவு முகாமைத்துவ குழுவின் உதவியை பெற்றுக் கொள்ளல், தயாரிக்கப்பட்டிருந்த வார உணவு நிகழ்ச்சி திட்டத்தை உரிய பிரிவுகளுக்கு வழங்குதல் மற்றும் மரக்கறிகள் வழங்குவதற்கான மாதாந்த நிகழ்ச்சி திட்டமொன்று தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்கூறிய சுற்றறிக்கையின் பந்திகள் 7.5 மற்றும் 7.7 இன் பிரகாரம் அதிகாலையில் வாட்டுகளுக்கு செல்லும் வைத்திய உத்தியோகத்தரினால் அனைத்தது நோயாளிகளுக்கும் பொருத்தமான உணவு வட்டமொன்று கட்டில் தலைமாட்டில் குறிப்பிடல் மற்றும் மேலதிக உணவு வகை தொடர்பாக தேவைக்கு ஏற்ப கட்டில் தலைமாட்டில் குறிப்பிட்டு அதனை தனிப்பட்ட முறையில் சான்றுபடுத்தவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) மேற்கூறிய சுற்றறிக்கையின் 8.1.1, 8.1.3 மற்றும் 8.1.4 பந்திகளின் பிரகாரம், ஒவ்வொரு மாதமும் முதலாம் நாள் தங்கி இருக்கும் நோயாளிகளுக்காக சுகாதாரம் 31 படிவத்தின் பிரகாரம் வாட்டிற்காக வேறாக புதிய உணவு வட்ட பத்திரம் ஒன்று தயாரிப்பதற்கும், உரிய உத்தியேகத்தரினால் கட்டில் தலைமாட்டில் பரிசோதனை செய்து உணவு வட்ட பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள உணவை பதிவதற்கும் ஒவ்வொரு நோயாளர்களின் உணவு வட்டத்தை சுருக்கி ஒரு நாளுக்கு தேவையான உணவு வட்டத்தின் எண்ணிக்கை காண்பதற்கு மற்றும் அதனை இருக்கு நோயாளிகளின் எண்ணிகையுடன் இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) மேற்கூறிய சுற்றறிக்கின் 10.5, 10.10, மற்றும் 11.7 பந்திகளின் பிரகாரம் சமைக்கப்பட்ட உணவுகளில் வீணாக்கப்படல் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அதன் பிரகாரம் பச்சை உணவுகளை சில சதவீதத்தினால் குறைந்து கட்டளை இடுவதற்கும் பெறுகைகள் குழுவினை அங்கீகரித்துள்ள மாதாந்த உச்சமட்ட வளங்கள் வரையறையான உணவுப் பொருட்களுக்கான கட்டளை இடுவதற்கும் மற்றும் அது தொடர்பாக

முறையான கட்டுபாடு ஒன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) மேற்கூறிய சுற்றறிக்கையின் 14.1, 15.1 மற்றும் 15.3 பந்திகளின் பிரகாரம், சமைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் விநியோகிப்பதற்கு முன்னர் உதாரணம் காட்டுவதற்கு வைத்தியசாலை ஊழியர் உணவு காட்களின் பிரகாரம் உணவு பெற்றுக் கொள்வதாக விளிப்பாக இருப்பதற்கும் மற்றும் உரிய உணவு தொகை மாத்திரம் ஊழியர்களுக்கு வழங்கப்படுவது என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(vi) மேற்கூறிய சுற்றறிக்கையின் 17 அட்டவணையின் பிரகாரம் அரசுக்கு குறைந்த கிரயமொன்று செலவிடப்படும் முறையில் பச்சை உணவுப் பொருட்களுக்கு கட்டளை இடல், பெற்றுக் கொள்ளல், சமைத்தல் மற்றும் வினியோகித்தல் தொடர்பாக முகாமைத்துவம் செய்வதற்காக உணவு முகாமைத்துவ குழு ஒன்று நியமனம் செய்திருக்கவில்லை.

### 4.4 நிதியங்களின் குறைபயன்பாடு

மீளாய்வண்டின் போது மருத்துவ உபகரணங்கள் கொல்வனவு செய்தல் மற்றும் அறுவை சிகிச்சை கூடத்தின் திருத்த வேலைகள் ஆகிய மூலதன செலவுகளுக்காக ரூபா 18,300,000 தொகை அரச மானியமாக கிடைத்திருந்த போதிலும், அவ்விடயங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்காமையால் அவற்றில் ரூபா 15,000,000 தொகையை விட மிகையான தொகையொன்று சேமிக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூலதனச் செலவுகளுக்கான காசேட்டின் பிரகாரம் மீதியாகக் காணப்பட்ட மொத்த அரச மானிய மீதி ரூபா 28,361,382 தொகை ஆக இருந்தது.

### 4.5 பதவியணியின் நிருவாகம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணி 250 தொகை மற்றும் உள்ளவாறன பதவியணி 210 தொகை ஆக காணப்பட்டதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஜுன் 02 திகதி இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3.1 பந்தியின் பிரகாரம் வைத்தியசாலை சபைக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவி ஒன்றிற்காக ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகள் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்டிருந்த பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள் எண்ணிக்கை 02 மற்றும் உள்ளவாறான எண்ணிக்கை 03 ஆகக் காணப்பட்ட போதிலும் மிகை பதவிக்கான அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வைத்தியசாலையின் 7 முக்கிய பதவிகளுக்குத் தேவையான பதவியணி முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் 2016 மார்ச் 14 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பதவிகளில் காணப்படும் 21 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 நிலைபெறுதகு அபிவிருத்தி

### 5.1 நிலைபெறுதகு அபிவிருத்தியின் குறிக்கோளை நெருங்குதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி என்பீ/எஸ்பீ/எஸ்டிஜீ/17 கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக வைத்தியசாலை சபை அறிந்திருக்காமையினால் தனது செயல் நோக்கெல்லை கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக நிலைபெறுதகு அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும், இலக்குகள் மீது நெருங்குவதை அளவீடு செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 கணக்காய்வு குழு

2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் ஏற்பாடுகளின் பிரகாரம், குறைந்த அளவு 3 மாதங்களுக்கு ஒரு முறையேனும் கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் எனினும், மீளாய்வண்டின் போது கணக்காய்வு குழுக்கூட்டம் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது.

### 6.2 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயற்பாடுகள்

#### 6.2.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மொத்த ஒப்பந்த வேலைகளின் பெறுமதி ரூபா 27,952,476 தொகைக்கான பராமரிப்பு மற்றும் சுத்திகரிப்பு சேவை, பச்சை உணவு பொருட்கள் பெற்றுக் கொள்ளல், பாதுகாப்பு சேவை, அசுத்தமான புடவைகள் கழுவுதல் மற்றும் தாதிகள் விடுதிக்காக வீடு ஒன்று வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் ஆகிய சேவைகள் பெற்றிருந்ததுடன், அச்சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான பெறுகைகளின் போது அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பந்தி 2.3.2 (ஆ) மற்றும் (இ), பந்தி 2.11.3, பந்தி 2.12 (அ), பந்திகள் 3.12.2 (i) (ii) மற்றும் (iii), பந்தி 5.3.1 (அ) முதல் (இ) வரை, பந்தி 5.3.2 மற்றும் பந்தி 6.3.6 இன் பிரகாரம், முறையே

(i) விலைகூறல்தாரர்களின் முன்னைய தகைமைகள் பரிசோதனை செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல், அங்கீகரித்தல் போலவே நியமக் குறியீடு உட்பட விலை கூறல் பதிவேடுகள் வரைபுகள் தயாரித்தல் மற்றும் அவற்றை அங்கீகரிப்பதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவுக்கு சமர்பித்திருக்கவில்லை.

(ii) பெறுகைகள் குழு மற்றும் தெழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அறிக்கைகள் குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் பதிவு செய்திருக்காமை.

(iii) பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கத்தவர்களினால் இரகசியத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மைகள் தொடர்பாக கூற்றொன்று கொடுத்திருக்காமை.

(iv) முன்னைய தகைமைகளை பரிசோதனை செய்யும் போது நெறிமுறைகளை அறுதியாக இனங்காணல் மற்றும் வெற்றிகரமாக ஒப்பந்த வேலையை செற்படுத்துவதற்காக விலை கூறல்தாரர்களிடம் காணப்படும் இயலுமையை தீர்மானிப்பதற்காக போதியளவு தகவல்கள் விலைகூறல் அழைப்பிதழில் உள்ளடக்கப்பட்டி ருக்கவில்லை.

(v) வைத்தியசாலை சபையினால் நியம விலைகூறல் அழைப்பு ஆவணங்களின் பொறுத்தமான மாதிரியினை பயன்படுத்தி இருக்காததுடன் நியம விலை கூறல் அழைப்பு ஆவணங்களுக்கு பதிலாக பயன்படுத்தப்படும் விலைகூறல் ஆவணங்களில் பொருத்தமான தன்மை பற்றி தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகை குழு பரிசோதனை செய்து அங்கீகரித்திருக்கவில்லை.

(vi) வெற்றிகரமான விலை கூறல் தாரர்களுக்கு காணப்பட வேண்டிய நேரடியாகவே தகுதி என உறுதிப்படுத்தும் நெறிமுறை மற்றும் தகைமைகளை உட்படுத்தி விலைகூறல் அழைப்பிதழ் தயாரித்திருக்கவில்லை.

(vii) விலைகூறிய திறத்தல் தொடர்பான அலுவல்கள் குறிப்பிட்ட படிவத்தின் பிரகாரம் அறிவித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வைத்தியசாலையின் பச்சை உணவுப் பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கான வருடாந்த ஒப்பந்த வேலைகளின் பெறுமதி, பெறுமதி கூட்டிய வரி இன்றி ரூபா 15,553,860 தொகையாகக் காணப்பட்ட போதிலும் உள்ளவாறான வருடாந்தச் செலவுகள் ரூபா 3,848,913 தொகை ஆக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மாதாந்த பச்சை உணவு பொருட்களின் தேவையை விட மிகையாக மதிப்பீடு செய்து விலைகூறல் அழைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அதிக எண்ணிக்கையான விலைகூறல்தாரர்களிடம் விலை கூறல் பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்பத்தை நழுவியிருந்ததுடன் வைத்தியசாலையின் வருடாந்த உண்மையான உணவு தேவையை விட 75 சதவீத கூடுதலான பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) விலை கூறல்களை மதிப்பீடு செய்யும் போது உணவுப் பொருட்களின் சந்தை விலை சுட்டெண்ணின் பிரகாரம் நியம விலையின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்திருந்த போதிலும் சில அத்தியவசிய உணவுப் பொருட்களுக்காக, தெரிவு செய்யப்பட்டிருந்த விலைகூறல் தாரர்களின் கூறுவிலைகள் நியம விலையை மிகைத்து இருந்த போதிலும் அது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை. 10 உலர் உணவுகள் தொடர்பான தெரிவுப் பரிசோதனையின் போது விலை அதிகரித்திருத்தல் நியம விலைக்கு ஒப்பாக 14 சதவீதம் 53 சதவீத வரையான வீச்சில் காணப்பட்டது

**6.2.2 ஒப்பந்த வேலைகளின் குறைபாடுகள்**

ஒப்பந்த வேலைகளின் பெறுமதி ரூபா 12,431,157 தொகைக்கான வைத்தியசாலை இரசாயன ஆய்வு கூட கட்டிட நிர்மாணித்தல் ஒப்பந்த வேலையில் முறையான கால நீடிப்புடன் ஒப்பந்தக் காலம் 300 தொகை எனினும் 412 நாட்களுக்கான காலம் ஒன்று எடுத்திருந்தது. அதன் பிரகாரம் 112 தாமத நாட்களுக்கான உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு நாளைக்கு ரூபா 6,000 வீதம் ரூபா 672,000 இற்கான தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனினும், அவ்வாறு தாமதக் கட்டணம் அறவிப்படாமல் ஒப்பந்தக்காரரின்

சிட்டைக்காக நூற்றிற்கு பத்து தடுத்து வைத்தல் பணம் தவிர முழுத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

**6.3 பாதீட்டு கட்டுப்பாடு**

15 விடயங்கள் தொடர்பான பாதீட்டுச் செலவுகள் மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 51 சதவீதம் முதல் 141 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டமை மற்றும் 4 செலவு விடயங்களுக்காக நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் ரூபா 609,325 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தமை ஆகிய காரணங்களினால் பாதீடு ஆக்கபூர்வமன முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகள் அவ்வப்போது வைத்தியசாலை சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) பெறுகைகள் மற்றும் ஒப்பந்த வேலைகள் கட்டுபாடு | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் நிர்மாண வேலையின் ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றி கொள்ளக் கூடிய விதமாக சிறந்த மேற்பார்வையொன்று செய்திருக்காமை, உச்ச மட்ட செயலாற்றுகை ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை மற்றும் பெறுகைகள் வழிகாட்டல்களை கடைபிடித்திருக்காமை |
| (ஆ) மருந்து இருப்பு கலஞ்சியக் கட்டுபாடு | இருப்பின் தேவையினை இனங்காணல் முதல் இருப்பினை பெற்றுக்கொள்ளல் மற்றும் வழங்குதலை ஆவணப்படுத்தல் மற்றும் கணக்கீடு செய்தல் வரையான நடவடிக்கைகள் போதியளவு மற்றும் முறையான அகக்கட்டுபாட்டு நடைமுறை ஒன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை மற்றும் பௌதீக இருப்பு கணிப்பீட்டு விடயங்கள் முறைசார் விதமாக மற்றும் இற்றைவரை பேணப்பட்டி ருக்கவில்லை. |
| (இ) கணக்கீடு | மருந்து இருப்புக் கட்டுபாட்டு கணக்கு பேணப்பபட்டிக்காமை மற்றும் நாட்குறிப்புப் பதிவுகளை பயன்படுத்தாமல் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படல். |